பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 03 2025 **SATURYDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் செயல்பாட்டை ஒட்டுமொத்த உலகமும் உற்றுநோக்கிக் கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மணிப்பூர் மாநிலத்தில் இம்மாதம் 8-ஆம் தேதிமுதல் அனைத்து சாலைகளிலும் தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும் என்று அம்மாநில அரசை, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக, முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் பிஜேபி பங்கேற்காது என்று அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

4. தில்லியில் இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு பெட்ரோல் விநியோகிக்கக் கூடாது என்று தில்லி அரசு உத்தரவிட்டுள்ளது.

5. மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி – பெங்களூரு அணிகள் இன்று மோதுகின்றன.

-- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

கடந்த நான்காண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உலகளாவிய எதிர்பார்ப்புகளை அதிகரித்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பயன்களை மக்கள் அதிக அளவில் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

பொருளாதார விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அனைத்துத்துறைகளிலும் இந்தியா வளர்ச்சிபெற்று வருவதாக தெரிவித்த திரு ஜெக்தீப் தங்கர், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதிலும் தமது பங்களிப்பை திறம்பட செய்து வருவதாகவும் கூறினார்.

<<<<<>>>>>

21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் செயல்பாட்டை ஒட்டுமொத்த உலகமும் உற்று நோக்கிக்கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று **‘NXT ’** உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் இந்தியாவின் செயல்பாடுகள், வளர்ச்சி மற்றும் திட்டங்கள் குறித்து நேரடியாக அறிந்துகொள்ள விரும்புவதாக தெரிவித்தார்.

இந்தியா குறித்த நேர்மறையான செய்திகள் அன்றாடம் வருவது ஒட்டுமொத்த உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், இவை அனைத்தும் உண்மை நிகழ்வுகள் என்றும் உறுதிபட தெரிவித்தார்.

பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளா பற்றி குறிப்பிட்ட அவர், உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்த பலகோடி மக்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியதாக தெரிவித்தார்.

இது ஒற்றுமையின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்றும் அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும், உள்நாட்டுப் பொருட்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தவும் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் அவர் குறிப்பிடடார்.

ஆயுஷ் உற்பத்திப்பொருட்கள், யோகா போன்றவை உலகின் பல பகுதிகளுக்கும் சென்றுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை உள்ளூர் சந்தைகளில் விற்றுவந்த நிலை மாறி, அவற்றை தரம் உயர்த்தி வெளிநாட்டு சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் உற்பத்தியாகும் சிறுதானிய வகைகள் மட்டுமின்றி, மஞ்சள் உள்ளிட்ட பொருட்களும் உலக சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பத்தாண்டுகால திட்டமிட்ட வளர்ச்சி உலக அரங்கில் இந்தியாவின் தலைமைத்துவத்தை உயர்த்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

உலகின் புதிய தொழிற்சாலையாக இந்தியா உருவாகியுள்ளது என்று கூறிய பிரதமர், திறன்மிக்க பணியாளர்களை உலகிற்கு உருவாக்கித்தரும் நாடாகவும் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

அதிக அளவில் இறக்குமதி செய்துவந்த நிலை மாறி, தற்போது உலகின் ஏற்றுமதி மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

குறைந்த கட்டமைப்புடன் ஆற்றல் மிகு நிர்வாகத்தை கொண்டுவருவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான புதுமை கண்டுபிடிப்புகளும் நிகழ்த்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இளைஞர்களின் திறன் மேம்பாடு மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய கல்விக்கொள்கை மாணவர்கள் தங்களது பாடப்புத்தகங்களை கடந்து சிந்தித்து செயல்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<>>>>>

மணிப்பூர் மாநிலத்தில் இம்மாதம் 8-ஆம் தேதிமுதல், அனைத்து சாலைகளிலும் தடையற்ற போக்குவரத்து உறுதி செய்ய வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மணிப்பூர் பாதுகாப்பு நிலைமை குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், சாலை போக்குவரத்துக்கு இடையூறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

மணிப்பூர் சர்வதேச எல்லைப்பகுதியில் வேலி அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க வேண்டும் என்றும், அதற்கான கட்டமைப்பை முறியடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மணிப்பூரில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மணிப்பூர் ஆளுநர் திரு அஜய் குமார் பல்லா, மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த் மோகன் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நாட்டின் வரிவசூல் நிர்வாக கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சிவில் கணக்கு நாள் விழாவில் பேசிய அவர், நாட்டின் பொது நிதி நிர்வாக கட்டமைப்பு நவீன தொழில்நுட்பத்தின்மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும், டிஜிட்டல் இந்தியா சேவைகள் நாட்டின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சென்றடைந்துள்ளதாகவும் கூறினார்.

பொது நிதிநிர்வாக கட்டமைப்பு மூலம், 60 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் வெளிப்படைத்தன்மையுடன் அரசின் சேவைகளை பெற்று வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், வேளாண் துறையின் செயல்பாடுகளை எளிமையாக்கும் நோக்கில் நடப்பாண்டு பட்ஜெட்டில் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரின் இந்த இணையவழி கருத்தரங்கில் நாடு முழுவதும் உள்ள வேளாண் வல்லுநர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.

தமிழகத்தின் நெல்லை மாவட்ட முன்னோடி வங்கியின் மேலாளர் திரு கணேச மணிகண்டன், இந்த இணையவழி கருத்தரங்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்திருந்தது என்று கூறினார்.

*(வாய்ஸ் பைட் - கணேச மணிகண்டன் - 22 செகண்ட்ஸ)*

பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து தாங்கள் அறிந்துகொண்டதாக விவசாயி திரு தமிழ்செல்வன் கூறினார்.

*(வாய்ஸ் பைட் - விவசாயி – 23 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக, முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் பிஜேபி கலந்துகொள்ளாது என்று அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக கற்பனையான மற்றும் அடிப்படை ஆதாரம் இல்லாத அச்சம் எழுந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த கூட்டம் மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சி என்றும் கூறியுள்ளார்.

இதனிடையே, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

அனைத்து 40 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>

கடந்த பிப்ரவரி மாதத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ஒன்பது புள்ளி ஒரு சதவீதம் அதிகரித்துள்ளது.

பிப்ரவரி மாதத்தில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் ஜிஎஸ்டி வரி வசூலாகியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது, மத்திய ஜிஎஸ்டி 35 ஆயிரத்து 204 கோடி ரூபாய் என்றும், மாநில ஜிஎஸ்டி 43 ஆயிரத்து 704 கோடி ரூபாய் என்றும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி 90 ஆயிரத்து 870 கோடி ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தலைநகர் தில்லியில் காற்றுமாசுவை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், 15 ஆண்டுகளுக்கும் கூடுதலாக பயன்பாட்டில் இருந்த வாகனங்களுக்கு பெட்ரோல் விநியோகிக்கக் கூடாது என்று தில்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு **Manjinder Singh** ’ உத்தரவிட்டுள்ளார்.

மேலும், காற்று மாசுபாட்டை தடுப்பதற்கு புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கண்டறிவதற்காக சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தில்லி விமான நிலையம், பன்னடுக்கு மாடி கட்டிடங்கள், உயரமாக கட்டப்பட்ட அலுவலகங்கள் ஆகியவற்றில் புகை மாசு தடுப்பு கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் திரு ‘**Manjinder Singh** தெரிவித்தார்.

<<<<<>>>>>

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், பெங்களூருக்கு அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது

பெங்களூருவில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<>>>>>